## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 301/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 27.01.2026.**

| | |
|---|---|
| **Name : Lidiya** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சேலம்கேம்பில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். 17.12.2023ம் தேதி திருமணம் நடந்தது. கடந்த 15.01.2024ம் தேதியன்று மாலை 4 மணியளவில் நானும் என் கணவர், என் மாமியார் ஆகியோர் வீட்டிலிருந்த போது பிரபு என்பவர் வந்து என்னை திட்டி என் அப்பா என்னை அழைப்பதாக சொன்னார். பிறகு அவர் வீட்டிற்கு சென்றுவிட்டார். பிரச்சனை நடந்த போது என்னை கொளத்தூருக்கு என் பாட்டி பிரபா என்னை அழைத்தார். நான் போக மறுத்துவிட்டேன்.

2) என் அத்தை எஸ்தாராணி என்னை செல்போனில் தொடர்பு கொண்டு என்னை கொன்றுவிடுவதாக மிரட்டிய பிறகு போனை துண்டித்துவிட்டார்கள். என் அத்தை மற்றும் அவரது மகன் விவேக் மற்றும் என் பாட்டி பிரபா, கல்யாணி, சங்கவி, சோனா, பாலதண்டாயுதம் வீட்டின் கதவை தட்டி அடிதடி செய்தார்கள். என்னுடைய குரல்வளையை எஸ்தர்ராணி என்பவர் பிடித்து நசுக்கினார். விவேக் என்பவர் என் கணவரை பிடித்து இழுத்து காலால் குரல் வளையை நசுக்கினார்.

3) என் கன்னம் கன்னமாக எஸ்தர் அடித்தார். பிரபு என்பவர் என்னுடைய புடவையை கிழித்து கீழே தள்ளி செருப்பால் அடித்தார். கல்யாணி என்பவர் என் தாலியை பிடித்து என் கழுத்தை நசுக்கி பறிக்க முயன்றார். விவேக் என்பவர் என்

கணவரின் தலையில் கட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தினார். பிரபு என்பவர் பெரிய கல்லை எடுத்து வயிற்றில் எறிந்தார். இதை கேட்க வந்த என் மாமியார் பத்மாவதியை பிரபு மற்றும் அவர் மகள் ப்ரீத்தி என்பவர் என் மாமியாரை கீழே இழுத்து அவரை அடித்து செருப்பால் கன்னத்திலும், நெஞ்சிலும் அடித்தார். பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றோம். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**